# IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM

## O.S.NO.90/2018

| | | |
|---|---|---|
| Deposition of Witness | : | PW- 3 |
| Name | : | ரவி |
| Father Name /W/o | : | கோபால் |
| Caste | : | இந்து |
| Calling | : | - |
| Address | : | பஜனைகோவில் தெரு, நெமிலி. |

Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day of 25.09.2023.

குறுக்கு விசாரணை :-

1. நான் நெமிலி தாலுக்கா, நெமிலி தாலுக்கா பஜனைகோவில் தெருவில் குடியிருப்பதாக சொல்லியுள்ள சங்கதிகள் சரியானவை தான் என்றால் ஆம். வழக்கு தாக்கல் செய்தது யார் என்றால் பொன்னுசாமி. தாவா சொத்து அரக்கோணம் வட்டம் தணிகைபோளூர் கிராம பஞ்சாயத்தில் அல்லியப்பன்தாங்கள் கிராமத்தில் உள்ளது என்றால் சரிதான். நான் குடியிருக்கும் இடத்திற்கும் தாவா சொத்திற்கும் 30 கிலோமீட்டர் தூரம் இருக்கும் என்றால் 20 கிலோமீட்டர் இருக்கும். பொன்னுசாமி எனக்கு நெருங்கிய நண்பர் என்றால் ஆம். எனவே அவர் அழைத்ததன் பேரில் தான் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் ஆம். வழக்கு சொத்தில் ராமச்சந்திரன் என்பவர் காலி செய்யாமல் தகராறு செய்வதால் பொன்னுசாமி வழக்க தாக்கல் செய்துள்ளார் என்றால் ஆம்.

2. அது சம்மந்தமாக தான் நீதிமன்றத்தில் வாக்குமூலம் அளிக்க வந்துள்ளேன் என்றால் ஆம். பொன்னுசாமி செட்டில்மெண்ட் எழுதியது பற்றி எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் நேரடியாக தெரியாது. கூட்டுறவு வங்கிக்கு பொன்னுசாமி கடன் பைசல் செய்ததாக சொல்லியுள்ளதற்கு நான் ஆவணம் ஏதாவது நேரில் பார்த்துள்ளேனா

என்றால் இல்லை. அவர் விவசாய கடன் வாங்கியதாகவும் அததைன பைசல் செய்ததாகவும் என்னிடத்தில் சொன்னதாக சொல்லியுள்ளேன் என்றால் ஆம். பொன்னுசாமி இராமசந்திரனுக்கு ஒப்பந்தம் ரூபாய் 1 இலட்சத்திற்கு ஒப்பந்தம் போட்டது எனக்கு தெரியுமா என்றால் தெரியும். எந்த தேதி, எந்த மாதம், எந்த வருடம் ஒப்பந்தம் போட்டார் தெரியுமா என்றால் தெரியாது. ஒப்பந்தம் போட்ட விவரம் பொன்னுசாமி சொல்லி தான் தெரியும் நேரடியாக தெரியாது என்று தான் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் ஆம். முன்பணமாக கொடுத்த ரூபாய் 20 ஆயிரத்தை இராமச்சந்திரன் பொன்னுசாமியிடமிருந்து திருப்பி பெற்றுக்கொண்டதாக பொன்னுசாமி என்னிடம் கூறியதாக பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் ஆம்.

3. முன்பண தொகையை திரும்ப பெற்றுக் கொண்டதாக இருந்தால் அந்த ஒப்பந்தத்தில் பின்பக்கத்தில் திரும்ப பெற்றதற்கு எழுதுவார்கள் என்றால் இதில் அவ்வாறு எழுதப்படவில்லை. இராமச்சந்திரம் பொன்னுசாமியிடமிருந்து முன்பணத்தை திரும்ப பெற்று கொண்டதற்கு ஆவணம் எதுவும் இல்லை என்றாலும் நான் எந்த ஆவணத்தையும் பார்க்கவில்லை என்றால் சரியல்ல. எந்த தேதியில் பணத்தை திரும்ப பெற்றுக்கொண்டார் என்று பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் என்னிடம் அவர் அதைப்பற்றி சொல்லவில்லை. வழக்கு சொத்து சம்மந்தமாக பொன்னுசாமி சொன்னதாக சொல்லியுள்ள சங்கதிகள் பொன்னுசாமி சொன்னதை தான் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றாலும், பொன்னுசாமி என் நெருங்கிய நண்பர் என்பதால் அவருக்காக அவர் சொன்னதன் அடிப்படையில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.